**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**அவசரக் கூட்டப்பொருள்**

2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8 ஆம்தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பொருள்கள்**

| மாமன்ற கூட்ட தேதி | | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| **08.02.11** | 1. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான பக்கிள் ஓடையை ஒட்டியுள்ள சந்தனமாரியம்மன் கோவில் தெருவிற்கும் எஸ்.எஸ்.பிள்ளை தெருவிற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள 17 எண்ணம் மின்கம்பங்களை மாற்றியமைக்கவும் மற்றும் வடக்கு பத்திரகாளியம்மன் கோவிலுக்கும் எஸ்.எஸ்.பிள்ளை தெருவிற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள டிரான்ஸ்பார்மர்கள் எண். N **34** மற்றும் N 14–ஐ இடம் மாற்றி அமைப்பதற்கும் உரிய செலவினத்தொகை ரூ **331750**/–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/08645/10 | 284) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 2. | தூத்துக்குடி மாநகராட்சியில் கல்வி நிதித் திட்டம் **2010–11**ம் ஆண்டிற்கான புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டுதல் பணிகளுக்கு உரிய மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை **08–09–2010**ம் தேதியன்று முதல்முறையாகவும் **06–10–2010**ம் தேதியன்று இரண்டாம் முறையாகவும் தினமணி நாளிதழிலும் **08–09–2010**ம் தேதியன்று தமிழ் முரசு நாளிதழிலும் **06–10–2010**ம் தேதியன்று இரண்டாம் முறையாகவும், தினமணி நாளிதழிலும் **08–09–2010**ம் தேதியன்று தமிழ்முரசு நாளிதழிலும்**06–10–2010**ம் தேதியன்று மாலை மலர் நாளிதழிலும் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு “தினமணி” நாளிதழ் உரிமையாளர் ஆன மெசர்ஸ் எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ் (மதுரை) லிமிடெட் நிறுவனத்தார் முதல் முறை விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரக்கட்டணத்தொகை ரூ **7,079**/–க்கு **08–09–2010**ம் தேதிய MAF/**304084**ம் எண் விளம்பர பில்லினையும், இரண்டாம் முறை விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரக் கட்டணத்தொகை ரூ **7079**/–க்கு **06–10–2010**ம் RAF/26131 ம் எண் விளம்பர பில்லினையும் ஆக மொத்தம் வரும் விளம்பரம் கட்டணத்தொகை ரூ **14158**/–க்கு விளம்பர பில்களை சமர்ப்பித்துள்ளார். மேலும் தமிழ்முரசு நாளிதழ் உரிமையாளர் ஆன மெசர்ஸ் கால் பப்ளிகேசன்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தார் மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரக் கட்டணத்தொகை ரூ **2520**/–க்கு **8–9–2010**ம் தேதிய **572875** TM எண் விளம்பரப் பில்லினையும் மெசர்ஸ் மாலை மலர் நாளிதழ் நிறுவனத்தார் மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரக் கட்டணத்தொகை ரூ **2178**/–க்கு **6–10–2010**ம் தேதிய NGL – D 101000.52ம் எண் விளம்பர பில்லினையும் சமர்ப்பித்துள்ளார்.<br><br>எனவே மெசர்ஸ் எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ் (மதுரை) லிமிடெட் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத்தொகை ரூ 14158/–ஐ யும் மெசர்ஸ் கால் பள்ளிகேசன் (பி) லிமிடெட் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத்தொகை ரூ 2520/– ஐயும் மெசர்ஸ் மாலை மலர் நாளிதழ் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத்தொகை ரூ 2178/–ஐயும் வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ம.ப.எண்.76/2010–11 | 285) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 3. | அரசால் ஒருமுறை வழங்கப்படும் மான்யம் 2008–2009ன் கீழ் இம்மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் ஜிப்போர்டு சீலிங் அமைத்தல் போன்ற பணிகளுக்கு உரிய குறுகிய | 286) அலுவலகக் குறிப்புப்படி |

| | | | |
|---|---|---|---|
| | | கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 10–11–2009ம் தேதியன்று மாலை மலர் நாளிதழில் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளிட்டமைக்கு உரிய விளம்பரக் கட்டணத்தொகை ரூ 1485/–க்கு 10–11–2009ம் தேதிய 33538ம் எண் விளம்பர பில்லினை மெசர்ஸ் மாலைமலர் நாளிதழ் நிறுவனத்தார் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>எனவே மெசர்ஸ் மாலைமலர் நாளிதழ் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ 1485/–ஐ வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ம.பஎண்.34/08–09 (CE) | அனுமதி வழங்கப்பட்டது |
| | 4. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள **1.** சிதம்பரநகர் மெயின் சாலை மற்றும் **2.**விவி.டி. மெயின் சாலை சீரமைக்கும் பணிக்கு உரிய ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை **1–12–2010**ம் தேதியன்று மாலை முரசு நாளிதழில் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரகட்டணத்தொகை ரூ **1292**/–க்கு **1–12–2010**ம் தேதிய TNL- D **10120004**ம் எண் விளம்பர பில்லினை மெசர்ஸ் மாலைமுரசு நாளிதழ் நிறுவனத்தார் இவ்வலுவலகத்– திற்கு சமர்ப்பித்துள்ளார்.<br><br>எனவே மெசர்ஸ் மாலைமுரசு நாளிதழ் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத்தொகை ரூ **1292**/–ஐ வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழஙகலாம்.<br><br>ம.ப.எண்.**184/2010–11** | 287) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 5. | தூத்துக்குடி மாநகராட்சி தேவர்புரம் சாலையில் **1)** திரு. சாமியாபிள்ளை **2)** திரு. தம்பித்துரை **3)** திரு. சேர்மத்துரை என்ற சேர்மராஜ் ஆகியோர் T.S.NO. **2882/2**ல் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என மாநகராட்சி ஆணையர் அவர்களை **4**வது பிரதிவாதியாக சேர்த்து தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு எம். செல்வராஜ் என்பவர் O.S. No. 459/10 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>மேற்கண்ட வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் திரு.என். செல்வராஜ் அவர்களை மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எப்**1/712/2011** | **288)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 6. | தூத்துக்குடி மாநகராட்சி முனியசாமிபுரம் தெருவில் டவுண்சர்வே வார்டு எண். **2** பிளாக் எண் **34**பி. டவுண் சர்வே எண். **3784/2A–4**ல் **10** அடி நீளத்திற்கு திரு. பலவேசம் மற்றும் திரு. சதாசிவம் ஆகியோர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்ற கோரி திரு பி. முருகன் த/பெ. பாண்டியன்பிள்ளை என்பவர் சென்னை, உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை முதல் பிரதிவாதியாகவும், இம்மாநகராட்சி ஆணையர் அவர்களை இரண்டாவது பிரதிவாதியாக சேர்த்து W.P.(MD) NO. **294/11**ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>மேற்கண்ட வழக்கில் வழக்கறிஞர் திரு. எஸ். கடற்கரை அவர்களை மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>எப்1/479/2011 | 289) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 7. இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சத்திரம் தெரு அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தை திரு. பாபு என்பவர் திருமண விழாவிற்காக 05–09–2010 அன்று வாடகைக்கு ஒதுக்கீடு செய்யக்கோரி 31–05–2010 அன்று மாநகராட்சி கருவூலத்தில் ரசீது எண். 102987ன் படி ரூ.22045/– செலுத்தியுள்ளார். எதிர்பாராதவிதமாக மணமகனின் தந்தை இறந்துவிட்டபடியால் மேற்படி திருமணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அன்னார் செலுத்தியுள்ள தொகை ரூ.22045/–ஐ திரும்ப வழங்க கோரி 23–08–2010ல் மனு செய்துள்ளார். அன்னார் பதிவு செய்த 05–09–2010 அன்று திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறாததால் அன்னார் செலுத்தியுள்ள தொகை ரூ 22,045/–ஐ திரும்ப வழங்குவது தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** சிறப்பினமாக கருதி செலுத்திய தொகையைத் திரும்ப வழங்கலாம்.<br><br>ந.க.எண். அ16/12038/2010 | 290) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 8. தூத்துக்குடி மாநகராட்சியில் தற்போது உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு இ. ஞானசேகர் என்பவர் வருவாய் பிரிவு அ16 இருக்கையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த காலத்தில் மேற்படி பணியிடத்தில் உள்ள கோப்புகள் மற்றும் சால்வன்சிகள் காணாமல் போனது தொடர்பாகவும் இதனால் மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட கடை உரிமம்தாரர்களிடம் கடை வாடகை வசூல் செய்ய முடியாமல் ரூபாய் ஒரு கோடி அளவில் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட காரணமாக இருந்ததாலும் தனியர் மீது முறையாக நடவடிக்கை மேற்கொண்டு காணாமல் போன கோப்புகள் மற்றும் சால்வன்சிகளை கண்டுபிடிக்கவும் வசூல் செய்யப்படாத கடை வாடகை நிலுவைத்தொகை ரூபாய் ஒரு கோடியை வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு தூத்துக்குடி மாநகரம் நந்தகோபாலபுரம் மெயின் கதவு எண். 52ல் குடியிருக்கும் வாதி திரு.சி. ராஜாமணி என்பவரால்,<br><br>1) அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை சென்னை அவர்களை முதல் பிரதிவாதியாகவும்,<br><br>2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை 2வது பிரதிவாதியாகவும்<br><br>3) மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அவர்களை 3வது பிரதிவாதியாகவும்<br><br>4) ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்களை 4வது பிரதிவாதியாகவும்<br><br>5) காவல் துறை ஆய்வாளர் மத்திய குற்றப்பிரிவு புலனாய்வுத்துறை (CBCID) அவர்களை 5வது பிரதிவாதியாகவும்,இணைத்து சென்னை, உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(M.D.) 1139 of 2011 ன் படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br><br>இவ்வழக்கில் மாநகராட்சி ஆணையர், தூத்துக்குடி அவர்களை 4வது பிரதிவாதியாக இணைத்து மேற்படி உயர்நீதிமன்றத்தில் தனியரால் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்கள் சார்பில் சென்னை, உயர்நீதிமன்ற மதுரை பெஞ்ச் அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு ஆர். ஜானகிராமுலு அவர்கள் நேரில் ஆஜராகி வாதாடவும் மேலும் இவ்வழக்கு தொடர்புடைய அனைத்து செலவினங்களை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –**<br><br>1) இவ்வழக்கில் மாநகராட்சி சார்பில் உயர்நீதி மன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு. ஜானகிராமுலு அவர்கள் ஆஜராகி வாதாட அனுமதி அளிக்கலாம்.<br><br>2) இவ்வழக்கு தொடர்புடைய அனைத்து செலவினங்களை பொது நிதிக் கணக்கிலிருந்து வழங்க அனுமதி அளிக்கலாம்.<br><br>சி1 / 1360/2011 | 291) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 9. | இம்மாநகராட்சிக்கான ஆணையாளர், பொறியாளர் வாகனம் TN. 69L-4612, TN.69AA-2634 ல் குளிர்சாதன வசதி செய்து கொள்ளவும் பணிகளை வாகனத்தின் அங்கீகாரம் பெற்ற டீலர் மெசர்ஸ் கொடை கார்ஸ் (P) லிமிடெட் நிறுவனத்தின் மூலம் செய்து கொள்ளவும் இதற்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். இ5/ 07736 /2010/2 | 292) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 10 | இம்மாநகராட்சி பகுதியில் உள்ள முக்கிய சாலைகளின் ஓரங்களில் உள்ள மணல் மேடுகள் பொது மக்கள் நடந்து செல்வதற்கும், இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன போக்குவரத்துக்கு பெரிதும் இடையூறாக உள்ளபடியால் மேற்படி மணல் குவியல்களை அகற்றுவதற்கு புதிய மணல் அகற்றும் வாகனம் (Sand Sweeping Machine) ஒன்று பொது மக்களின் நலன் கருதி வாங்க வேண்டியது மிக அத்தியாவசியமாகிறது.<br><br>எனவே மணல் அகற்றும் வாகனம் (Sand Sweeping Machine) ஒன்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்குவதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** பொது மக்கள் நலன் கருதி மணல் அகற்றும் வாகனம் (Sand Sweeping Machine) ஒன்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்க அனுமதிக்கலாம், அதற்காகும் தோராய செலவு தொகை ரூ20.00 இலட்சம் மாமன்றம் அனுமதிக்கலாம். இ5 /1483/ 2011 | 293) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 11 | இம்மாநகராட்சி பகுதியில் உள்ள வார்டு பொது மக்களின் நலனுக்காக, பொது மக்கள் விருப்பத்தின் பேரில் அவர்கள் வீட்டு திருமணம், சடங்கு போன்ற இதர விசேசங்களுக்கு மாநகராட்சியில் பணம் செலுத்தியதன் பேரில் இம்மாநகராட்சி இரண்டு டில்லர் மூலம் குடிநீர் மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு டில்லர்களில் ஒன்று பழுதாகி இயக்க இயலாத நிலையில் உள்ளது. மற்றொன்று அடிக்கடி பழுதாகி பொது மக்களுக்கு தொடர்ந்து குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது.<br><br>எனவே பொது மக்கள் நலன் கருதி மினி லோடு வாகனம் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட டேங்கருடன் கூடிய ( TATA – ACE) வாகனம் இரண்டு எண்ணம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்குவதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : 1) மினி லோடு வாகனம் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட டேங்கருடன் கூடிய (TATA – ACE) வாகனம் இரண்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்க மாமன்றம் அனுமதிக்கலாம், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) மேலும் தற்போது உள்ள பழைய டில்லர்கள் இரண்டு எண்ணம் கழித்தொதுக்குதல் (Condemed) செய்து அதற்கு பதிலாக மேற்கண்ட புதிய இரண்டு எண்ணம் வாகனம் வாங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3 / 1508 /2011 | 294) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது |
| | 12 | இம்மாநகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவன சேவை நிதியுதவி மற்றும் பொது மக்கள் பங்கு தொகை நிதியுதவியுடன் ரூ80.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளில் வார்டு பகுதிகளில் குழாய் பதிக்கும் பணிகள், கழிவு நிரேற்று நிலையம், மற்றும் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் தொடங்கப்பட்டு 85 சதம் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது.<br><br>மேற்கண்ட பணிகள் செய்வதற்கு பொது மக்கள் பங்கு தொகையாக ரூ23.85 கோடி இம்மாநகராட்சி சொத்து வரிவிதிப்பாளர்களிடம் வசூல் செய்து பணிகள் செய்ய இம்மாமன்ற தீர்மானம் எண் 1, நாள்04.01.2010 இல் அனுமதி அளித்துள்ளது.<br><br>இந்நிலையில் பொது மக்கள் பங்கு தொகையாக கட்டிட அனுமதி கோரி வரும் கட்டிட உரிமையாளர்கள், புதிய குடிநீர் குழாய் இணைப்பு கோரும் வீட்டு உரிமையாளர்கள், | 295) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | சுகாதார சான்று கோரும் கல்வி நிறுவனங்கள் மற்றும் சொத்து வரி பெயர் மாற்றம் கோரும் வீட்டு உரிமையாளர்களிடம் மட்டுமே மேற்படி வைப்புத்தொகை வசூல் செய்யப்பட்டு வருகின்றன. இது வரை மாநகராட்சியில் பெறப்பட்ட மேற்படி வைப்புத்தொகை பொது மக்கள் தொகையில் 12% மட்டும் ஆகும்.<br><br>பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளபடியால் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொகை செலுத்த முடியாத நிலை இருந்து வருவதால், பணிகள் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் எண். 39774/ 2006/UGSS 2 , நாள் 31.01.2011 இல் தெரிவிக்கப்பட்ட படி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திடம் கடன் பெற்று பொது மக்கள் பங்கு தொகையினை மூன்று முதல் ஏழு ஆண்டுகள் திருப்பி செலுத்தும் விதத்தில் தூத்துக்குடி மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டப்பணிகள் செம்மையாக நடைபெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திடம்(TNUIFSL) கடன் பெறவும், மேற்படி கடன் தொகையினை மாநகராட்சி வரிவிதிப்பாளர்களிடம் இருந்து மேற்படி திட்டத்திற்கு பெறப்படும் பொது மக்கள் பங்கு தொகையினை ஏழு ஆண்டுகள் திரும்ப செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3 / 11512 / 2007 | |
| | 13. | இம்மாநகராட்சிப் பகுதியில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை மெயின் குழாய் அமைக்கப்பட்ட இடங்களில் உள்ள மனிதர்கள் இறங்கி சுத்தம் செய்ய மனித குழி மூடிகள்(MAN HOLE) இருக்கும் பகுதிகளில் அடைப்புகள் ஏற்பட்டு பொது மக்களுக்கு சுகாதார கேட்டினையும், போக்குவரத்துக்கு மிகுந்த இடையூறாகவும் உள்ளபடியாலும், அரசாணை எண். 293, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.11.2010 இல் துப்புரவு தொழிலாளர்கள் பாதாள சாக்கடை மற்றும் மலக்குழியில் மனிதர்கள் இறங்கி சுத்தம் செய்ய தடை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளதாலும் அவசியம் கருதி இம்மாநகராட்சிக்கு புதியதாக பாதாள சாக்கடை குழி சுத்தம் செய்யும், மனித குழி மூடி தூர்வாறும் வாகனம் ஒன்று (Man Hole Silt man ) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அனுமதி பெற்று வாங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** அவசரம் அவசியம் கருதி புதிய மனித குழி மூடி தூர்வாறும் வாகனம் (Man Hole Silt man) ஒன்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அனுமதி பெற்று வாங்குவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட வாகனம் வாங்குவதற்கு தோராய செலவு ரூ6.00 இலட்சம் மற்றும் அதற்குரிய செலவினம் ஆகியவற்றை, பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ3 /11512 / 2007 | 296) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 14 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். 52923 / 2010 / WS1, நாள் 13.11.2010 மற்றும் கடிதம் எண் 55876/ 2010/ WS1, நாள்29.11.2010 இல் தெரிவித்துள்ளபடி இம்மாநகராட்சி பகுதியில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு தொடர்பான பணிகளில் ஏற்படும் பிரச்சினைகள் சரி செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் அடிப்படையில் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக மூன்று கிணறுகள் அமைத்து, கூடுதலாக 35 HP மற்றும் 40 HP மின்மோட்டார்கள் வாங்கிடவும், குடிநீர் பம்பிங் மெயின் பிரதான குழாய் PSC & RCC குழாய்களை DI குழாய்களாக மாற்றியமைக்கவும், நீரேற்று நிலையங்களான மண்டலம் 3& 4 இல் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் நீரேற்றும் நேரம் அதிக நேரம் ஆகிறபடியால் அதற்கு என தனியாக பம்பிங் மெயின் மற்றும் பம்ப் செட்,மின் இயக்கிகள் மற்றும் மின்பகிர்மானம் ஆகியன தனியாக பொருத்தவும், குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கவும், 100 MM ஏசி குழாய்கள் உள்ள இடங்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் அதனை பிவிசி குழாய்களாக மாற்றியமைக்கவும், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் குடிநீர் விநியோகம் மற்றும் பகிர்மானம் செய்ய ஸ்லைஷ் வால்வுகள் பொருத்தவும், முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களின் தலைமையில் 06.01.2011 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டம் கலந்துரை கூட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 20450 / பி2/ நாள்11.01.2011 இல், மேற்படி குடிநீர் விநியோகம் தொடர்பான பிரச்சினைகளை சரி செய்ய தொழில் நுட்ப ஆலோசகர் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** :<br><br>1. இம்மாநகராட்சி பகுதியில் தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்து மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், குடிநீர் திட்டத்தினை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2. குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்து குடிநீர் திட்டத்தினை மேம்படுத்தி முன்னோடி திட்டம் தயார் செய்ய தொழில் நுட்ப ஆலோசகர் ஒருவரை நியமனம் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ3 / 18100 / 2010 | 297) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி வழங்கப்பட்டது |
| | 15. | இம்மாநகராட்சி பகுதியில் உள்ள சிமிண்ட் சாலைகள் மற்றும் தார்சாலைகள் மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.501.40 லட்சத்திற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 41696/இ2/2010 நாள் 14.01.2011ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ.501.40 லட்சம் இயற்கை இடர்பாடுகள் 2010 திட்டத்தின் கீழ் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பணிக்கு தொழில் நுட்ப அனுமதி மாநகராட்சி பொறியாளர் மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் எண். 3081/N.C.R/DO1/2011 நாள் 20.01.2011ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பணிக்கு உரிய ஒப்பந்தப்புள்ளிகள் 31.01.2011 அன்று கோரப்பட்டது. 31.01.2011ம் தேதி மாலை 3.00 வரை இரண்டு அடுக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>அதன்படி மேற்படி பணிக்கு பெறப்பட்ட Technical Bid. Local Tender Scrutiny Committee க்கு 01.02.2011ல் பொருள் வைக்கப்பட்டது. கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>1. மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன்<br>2. திரு.எஸ். சுதர்சன், குருஸ்புரம் | 298) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு State Level Tender Scrutiny Committee தனது கூட்டத்தினை 02.02.2011ம் தேதியன்று கூட்டி Technical Bid க்கு ஒப்புதல் வழங்கி Price Bid திறக்க அனுமதி வழங்கப்பட்டது.<br><br>விலைப்புள்ளி திறக்க சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பி 03.01.2011ம் தேதியன்று விலைப்புள்ளி திறக்கப்பட்டது. திரு. எஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் என்பவர் ரூ.52415205.65க்கு மதிப்பீட்டினை விட 7.27 சதவீதம் கூடுதலாகவும், மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன் என்பவர் ரூ.51588247.50க்கு மதிப்பீட்டினை விட 5.57 சதவீதம் அதிகமாகவும் கொடுத்துள்ளனர்.<br><br>குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வழங்கிய மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன் அவர்களிடம் விலை குறைப்பு செய்ய கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன் என்பவர் தனது 04.02.2011ம் தேதிய கடிதத்தில் குறைப்பு கடிதம் சமர்ப்பித்துள்ளார். அதன்படி மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன் என்பவர் மதிப்பீட்டை விட 3.81 சதவீதம் (ரூ.50726207/–) கூடுதலாக கொடுத்துள்ளார். எனவே மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு– பொறியாளர் கையேடு பக்கம் 9 பாரா 2.7.2ல் தெரிவித்துள்ளபடி மதிப்பீடு தொகையை விட 5 சதவீதம் வரை உள்ள பணிகளுக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது சிமிண்ட், கம்பி மற்றும் மணல் போன்ற கட்டுமான பொருள்கள் சந்தை விலையை காட்டிலும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், வெள்ள நிவாரண பணி உடனடியாக செய்ய வேண்டிய காரணத்தினாலும் அவசர அவசியத்தை முன்னிட்டு தற்போது பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி 3.81 சதவீதத்தினை (ரூ. 50726207.00) ஒப்புதல் அளிக்கலாம். எனவே தற்போது பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் எம்.ஜே.கண்ஸ்ட்ரக்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 50726207/– (மதிப்பீட்டை விட 3.81 சதவீதம் அதிகம்) ஒப்புதல் அளிக்கலாம். அரசு அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br><br>19870/2010/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>16. இம்மாநகராட்சி பகுதி சிதம்பர நகர் மெயின் சாலையில் தார்தளம் மேம்படுத்தும் பணி துறைமுக பொறுப்புக் கழக நிதியில் செய்ய 22.12.2010 அன்று E.Tender மூலம் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு 25.01.2011 அன்று தொழில் நுட்ப கூட்ட பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் 04.02.2011 அன்று விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1)திரு எஸ். ரம்போலா, ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு ரூ.4.51% அதிகம் (ரூ.4827459/–) — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்<br><br>2) திரு எஸ்.சுதர்சன் — மதிப்பீட்டிற்கு ரூ. 7.10% அதிகம் (ரூ.4947388/–) — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டைவிட அதிகமாக கொடுக்கப்பட்டு இருந்ததால் ஒப்பந்தகாரர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தக்காரர் திரு எஸ். ரம்போலா விலைக்குறைப்பு கடிதம் கொடுத்துள்ளார். ஒப்பந்தகாரர் கொடுக்கப்பட்ட விலைக்குறைப்பின்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் திரு எஸ்.ரம்போலா அவர்கள் மதிப்பீட்டை விட 0.013 சதவிகிதம் (ரூ. 4618709) குறைவாக கொடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u> மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண்.186/10–11</td>
<td>299) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 17. | இம்மாநகராட்சி பகுதி வி.வி.டி. மெயின் சாலையில் தார்தளம் மேம்படுத்தும் பணி துறைமுக பொறுப்புக் கழக நிதியில் செய்ய 22.12.2010 அன்று E.Tender மூலம் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு 25.01.2011 அன்று தொழில் நுட்ப கூட்ட பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் 04.02.2011 அன்று விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு ரூ.0.97% அதிகம் (ரூ.5882248/–) — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்<br><br>2) M/s.இம்மானுவேல் & Co ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு ரூ. 0.48% அதிகம் (ரூ.5853544/–) — டேவணித் தொகை செலுத்தியுள்ளார்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டைவிட அதிகமாக கொடுக்கப்பட்டு இருந்ததால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தக்காரர் M/s.இம்மானுவேல் & Co விலைக்குறைப்பு கடிதம் கொடுத்துள்ளார். ஒப்பந்தகாரர் கொடுக்கப்பட்ட விலைக்குறைப்பின்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் M/s.இம்மானுவேல் & Co அவர்கள் மதிப்பீட்டை விட 0.014 சதவிகிதம் (தொகை ரூ. 5824924)குறைவாக கொடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண்.185/10–11 | 300) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 18. | இம்மாநகராட்சி பகுதியில் உள்ள பக்கிள் ஓடையில் மூன்றாம் கட்டமாக 1.10 கி.மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் தளம் மற்றும் சிறு கால்வாய் கட்டும் பணிகளுக்கு ரூ.415.00 லட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 51913/P3/2010–2 நாள் 24.11.2010ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ 400.00 லட்சம் உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதி வரி ஈடு செய்யும் நிதியிலிருந்தும் ரூ 30 லட்சம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பணிக்கு தொழில் நுட்ப அனுமதி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் எண். 1287/வ.அ–1/2010 நாள் 25–11–2010ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பக்கிள் ஓடை மூன்றாம் கட்ட பணிக்கு ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய இவ்வலுவலக கடிதம் எண். இ1/23660/2007 நாள் 26.11.2010ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 07.01.2010ம் தேதி மாலை 3.00 வரை இரண்டு அடுக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>அதன்படி மேற்படி பணிக்கு பெறப்பட்ட Technical Bid. Local Tender Scrutiny Committee க்கு 25.01.2011ல் பொருள் வைக்கப்பட்டது. கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>1.திரு. எஸ். சுதர்சன், குரூஸ்புரம்<br>2.திரு.எஸ். ரெக்ஸ், குருஸ்புரம்<br><br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி Technical Bid Evaluation செய்வதற்கு State Level Tender Scrutiny Committeeக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இவ்வலுவலக கடிதம் எண். 23660/07/இ1 நாள் 27.01.2011ல் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.<br><br>State Level Tender Evaluation Committee தனது கூட்டத்தினை 28.01.2011ம் தேதியன்று கூட்டி Technica Bid க்கு ஒப்புதல் வழங்கி Price Bid திறக்க அனுமதி வழங்கப்பட்டது. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியர் அவர்கள் கடித எண் 1287–1/DO1/2010–1 நாள் 28.01.2011படி ஒப்புதல் அளிக்கப்பட்டது. | 301) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | அதன் அடிப்படையில் Price Bid திறக்க சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பி 01.02.2011 தேதியன்று Price Bid திறக்கப்பட்டது. திரு. எஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் என்பவர் ரூ.4,34,91,683.25 க்கு மதிப்பீட்டினை விட 4.90 சதவீதம் கூடுதலாகவும், திரு. எஸ். ரெக்ஸ் என்பவர் ரூ.4,44,10,892/–க்கு மதிப்பீட்டினை விட 7.12 சதவீதம் அதிகமாகவும் கொடுத்துள்ளனர்.<br><br>குறைந்த Price Bid வழங்கிய திரு எஸ். சுதர்சன் என்பவரக்கு விலை குறைப்பு செய்ய கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. திரு எஸ். சுதர்சன் என்பவர் தனது 03.02.2011ம் தேதிய கடிதத்தில் குறைப்பு கடிதம் சமர்ப்பித்துள்ளார். அதன்படி திரு எஸ். சுதர்சன் என்பவர் மதிப்பீட்டை விட 4.83 சதவீதம் கூடுதலாக தொகை ரூ.43461658.25 கொடுத்துள்ளார். எனவே திரு. எஸ். சுதர்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.43461658.25 ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** பொறியாளர் கையேடு பக்கம் 9 பாரா 2.7.2ல் தெரிவித்துள்ளபடி மதிப்பீடு தொகையை விட 5 சதவீதம் வரை உள்ள பணிகளுக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது சிமிண்ட், கம்பி மற்றும் மணல் போன்ற கட்டுமான பொருள்கள் சந்தை விலையை காட்டிலும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், உடன் தற்போது பணி செய்ய வேண்டிய காரணத்தினாலும் அவசர அவசியத்தை முன்னிட்டு தற்போது பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ். சுதர்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி 4.83 சதவீதத்தினை (ரூ. 4,34,61,658.25) ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு 2010–11ம் ஆண்டு Schedule of Rate அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ். சுதர்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ 43461658.25 (மதிப்பீட்டை விட 4.83 சதவீதம் அதிகம்) ஒப்புதல் அளிக்கலாம்.<br>23660/2007/இ1 | |
| | 19. தூத்துக்குடி மாநகராட்சியின் மையப்பகுதியில் ராஜாஜி பூங்கா மற்றும் நீர்த்தேக்க நிலையம் உள்ளது. தற்போது பொதுமக்கள் அதிக அளவில் பொழுதுபோக்கிற்காகவும் காலை நேரத்தில் உடற்பயிற்சி மேற்கொள்ளவும் வருகைபுரிகிறார்கள். விடுமுறை நாள்களில் மேலும் அதிக அளவில் பொதுமக்கள் கூடும் இடமாக உள்ளது. நீர்த்தேக்க பகுதி மற்றும் பூங்கா பகுதியில் அதிக அளவில் மரங்கள் உள்ளது. எனவே அதிக அளவில் குப்பைகள் சேருகின்றது. ஆகையால் மேற்படி இடத்தினை சுத்தமாக வைத்துக்கொள்ளவும், தொற்று நோய்கள் பரவுவதை தடுக்கவும், சுகாதார பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாததால், தினமும் இரண்டு முறை குப்பைகளை அள்ளவும், சுத்தமாக வைத்துக்கொள்ளவும், தனியார் மூலம் துப்புரவு பணியினை மட்டும் மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1.10003/2010 | 302) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 20. இம்மாநகராட்சி வார்டு எண் 1 முதல் 51 வரையில் உள்ள பகுதிகளில் அதிக அளவில் பன்றிகள் பெருகியுள்ளதால் அவைகளால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடைஞ்சல்கள் ஏற்படுவதோடு மட்டுமின்றி தொற்று நோய்களை பரப்புவதற்கும் மூல காரணமாக இருப்பதால் பன்றிகளை துன்புறுத்தாமல் பிடித்து அப்புறப்படுத்தவும், பிடித்திடும் பன்றி ஒன்றிற்கு ரூபாய் 50/– மாநகராட்சிக்கு செலுத்தி மாநகராட்சிப் பகுதிக்கு வெளியில் எடுத்து செல்லவும், நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>எச்4/10961/2011 | 303) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

மாமன்றம், தூத்துக்குடி.
நாள். 07–02–2011

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி.

**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**சாதாரணக் கூட்டப்பொருள்**

2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**<u>பொருள்கள்</u>**

| மாமன்ற கூட்ட தேதி | | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| **25.02.11** | 1. | தூத்துக்குடி மாநகராட்சி பிரையண்ட்நகர் 12வது தெரு மேற்கு பகுதியில் சர்வே வார்டு சி, பிளாக் எண் 52, நகரளவு எண் 3ல் ஆக்கிரமிப்பு செய்து குடியிருக்கும் பொதுமக்கள் சொத்துவரி, தண்ணீர் வரி மற்றும் தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதி வேண்டியும், ஆக்கிரமிப்பு இடத்திற்கு பட்டா வேண்டியும் நடவடிக்கை மேற்க்கொள்ள கோரி வரப்பெற்ற பிரையண்ட்நகர் 12வது தெரு (மேற்கு பகுதி) பொதுமக்களின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>பிரையண்ட்நகர் 12வது தெருவில் (மேற்கு பகுதியில்) ஆக்கிரமிப்பு செய்து குடிசை குடியிருப்புகள் கட்டியுள்ள இடம் சர்வே வார்டு சி, பிளாக் எண் 52, நகரளவு எண் 3ல் அமைகிறது. மேற்படி இடம் நகரளவு ஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு பாதை என உள்ளது. ஆக்கிரமிப்பு இடம் பாதையாக உள்ளதால் பாதையின் பிற்கால பயன்பாடு குறித்து உரிய அலுவலர்களால் ஆய்வு செய்து பட்டா வழங்குவது குறித்து மாவட்ட ஆட்சியரை கேட்டுக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/9357/07 | 304) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 2. | இம்மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் முக்கியமான சாலையினை மேம்பாடு செய்வதற்காக தூத்துக்குடி ஸ்டெர்லைட் (இந்தியா) நிறுவனம் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்ததன் அடிப்படையில், இம்மாநகராட்சி பகுதி போல்பேட்டை 60அடி சாலையிலிருந்து கிழக்காக திரேசபுரம் பாலம் வரையிலுள்ள சாலையினை மேம்பாடு செய்ய மதிப்பீடு தயார் செய்து வழங்கப்பட்டது. தற்போது மேற்படி பணி சிறப்பு சாலை மேம்பாட்டு திட்டம் 2010–11ன் கீழ் மேற்க்கொள்ளப்பட்டதால் அதற்கு பதிலாக மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவையான உபகரணங்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்க மேற்கண்ட ஸ்டெர்லைட் (இந்தியா) நிறுவனம் முன் வந்துள்ளது. மேல்நடவடிக்கைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.<br>எச்1/12377/11 | 305) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 3. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நகர சுகாதார செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2010ம் வருடத்திற்கு சீருடைப்படி வழங்குவதற்கு, அரசாணை எண் 236 நாள் 01.06.2009ன்படி வழங்குவதற்கு தலா ரூ.750/– வீதம் இருபது நகர சுகாதார செவிலியர்கள், மூன்று மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு தொகையாக ரூ.17250/–ம் மற்றும் இரண்டு பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படியாக தலா ரூ.1200/– வீதம் வழங்க தொகையாக ரூ.2400/–ம் ஆக மொத்தம் ரூ.19650/– தேவைப்படுகிறது. எனவே மேற்படி தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம். எச்4/507/11 | 306) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 4. தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மண்டல மேலாளர் அவர்கள் பாளையங்கோட்டை ரோடு மாநகராட்சி புதிய அலுவலக வளாகத்தினுள் A.T.M. மையம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்ய கோரி வரப்பெற்றுள்ள 09.02.2011ம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>மாநகராட்சி புதிய அலுவலக வளாகத்தினுள் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் A.T.M. மையம் செயல்படுவதற்கு இடம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் தர வாடகையை தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மாநகராட்சிக்கு செலுத்தும் பட்சத்தில் A.T.M. மையம் அமைக்க இட ஒதுக்கீடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ1/00173/10 | 307) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 5. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் மருந்தாளுநர் ஆக பணிபுரியும் திரு சி.ராம்குமார் என்பவரும் இம்மாநகராட்சி பொறியர் பிரிவில் துலக்குநர் ஆக பணிபுரியும் திரு இ.அருள் பர்னாண்டோ ஆகிய இருவரும் மாற்று திறன் உடையவர்கள் (ஊனமுற்றோர்) என்பதால் இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய தொழில்வரி தொகையிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169எச்(C)யின்படி மேற்படி திரு சி.ராம்குமார் (அரசு மருத்துவமனை மருந்தாளுநர்) மற்றும் திரு இ.அருள் பர்னாண்டோ (மாநகராட்சி துலக்குநர்) ஆகிய இருவருக்கும் 2010–11 – IIவது அரையாண்டு முதல் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** அனுமதி வழங்கலாம். அ10/2468/09 | 308) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 6. இம்மாநகராட்சியின் 2011–2012ம் ஆண்டின் உத்தேச வரவு மற்றும் செலவு மதிப்பீடு மற்றும் 2010–2011ம் வருடத்திய திருத்திய வரவு மற்றும் செலவு மதிப்பீடு கீழ்காணும் நிதிகளுக்கு (1) வருவாய் (ம) மூலதன நிதி (2) குடிநீர் (ம) வடிகால் நிதி (3) கல்வி நிதி ஆகிய வகைகளுக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>பி7/02188/2010 | 309) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 310) இன்று (25.02.2011) நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் திரு செ.ஈஸ்வரன் 2011–12ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாநகராட்சி பட்ஜெட் நகலினை மாமன்ற கூட்டரங்கில் கிழித்தெறிந்து பாரம்பரியமான மாமன்றக் கூட்டத்தை சீராக நடத்தவிடாமல் கூட்ட நடவடிக்கைகளுக்குப் புறம்பாக நடந்து கொண்டதோடு இதர மாமன்ற உறுப்பினர்களிடையே தேவையற்ற பதட்டத்தையும், சூழ்நிலையும் உருவாகக் காரணமாக செயல்பட்ட மேற்படி மாமன்ற உறுப்பினரை நிர்வாக நலன் கருதி அடுத்து வரும் ஒரு மாமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருக்க தற்காலிகமாக நிறுத்தி வைக்க பெருமளவு மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்மானிக்கப்பட்டது. | |

மாமன்றம், தூத்துக்குடி
நாள்: **18.02.2011**

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி.

**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**<u>அவசரக்கூட்டப்பொருள்</u>**

2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ஆம்தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**<u>பொருள்கள்</u>**

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| **25.02.11** | 1. இம்மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் சம்பந்தமாக தயார் செய்யப்பட்ட பாதாள சாக்கடை வடிகால் திட்ட உபவிதிகள் இம்மாமன்றத்தால் தீர்மானம் எண்1 நாள்04.01.2010 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பேரில் மேற்படி வடிகால் திட்ட உபவிதிகளை மாவட்ட அரசிதழில் மற்றும் தமிழ்நாடு அரசிதழில் 13.10.2010 அன்று அறிவிக்கை வெளியிட்டும், பத்திரிக்கைகளில் விளம்பரமும் செய்யப்பட்டது. மேற்படி திட்ட உபவிதிகள் குறித்து பொது மக்களிடம் இருந்து கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை.மேலும் மேற்படி திட்ட உப விதிகளை இறுதி செய்து மாமன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு மாமன்றம் தனது தீர்மானம் எண்246 நாள் 22.11.2011இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட உபவிதிகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் செயல்முறை ஆணை எண் 48383 / 2003 / பா.சா.தி1, நாள்05.02.2011 இல் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>எனவே இறுதி செய்யப்பட்ட பாதாள சாக்கடை வடிகால் திட்ட உபவிதிகள் மாமன்றத்தின் பார்வைக்கும்,பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி வடிகால் திட்ட உபவிதிகளை தமிழ்நாடு அரசிதழில் இறுதி அறிவிப்பு செய்திடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அ.கு** . 1. மாமன்றம் பதிவு செய்யலாம்<br><br>2. தமிழ்நாடு அரசிதழில் இறுதி அறிவிப்பு செய்திட ஆகும் உத்தேச செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம். இ3 / 11512 /2007 | 311) அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அனுமதி அளிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 2. | இம்மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த நகர்ப்புற குடிசைப் பகுதி மேம்பாட்டு மற்றும் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பின்வரும் 8 குடிசை பகுதிகளில் புதிய குடியிருப்பு கட்டுதல் மற்றும் எற்கனவே உள்ள ஒடு குடியிருப்பை அபிவிருத்தி செய்ய தகுதி வாய்ந்த 500 பயனாளிகள் தேர்வு செய்ய இம்மாமன்றம் தனது தீர்மானம் எண்.63, நாள் 26.02.2009 இல் ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளில் சிலர் அலுவலக வேலை உத்தரவு பெற்றும் கட்டுமான பணி மேற்கொள்ளாததால் பின் வரும் குடிசை பகுதியில் உள்ள தேர்வு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பிற பயனாளிகள் பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**குடிசைப்பகுதிகளின் விபரம்**<br><br>1. போல்பேட்டை டி.எம்.சி.காலனி<br>2. கந்தசாமிபுரம்<br>3. சுந்தரவேல்புரம்<br>4. கிருஷ்ணராஜபுரம் வார்டு 6,7<br>5. மங்களாபுரம்<br>6.குரூஸ்புரம்<br>7. திரேஸ்புரம்<br>8.கே.வி.கே.நகர்<br><br>**அலுவலக குறிப்பு .** மாமன்றம் அனுமதிக்கலாம் இ1 / 6385 /2006 | 312) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 3. | திரு. ஜோசப் சுகந்தா என்பவர் ஹோட்டல் சுகம் வளாகத்தில் கார் பார்க்கிங் உடன் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு வரி விதிப்பு செய்ததற்கு வரித்தொகை அதிகமாக உள்ளதை குறைக்க கேட்டு மாநகராட்சி வரிமேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் விண்ணப்பித்து மேற்படி வரியினை உறுதி செய்து வரிமேல் முறையீட்டு தீர்ப்பாயம் தீர்ப்பு எண்.TAT No. 102, 103/2010ன் படி தீர்ப்புரை வழங்கி உள்ளது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மனுதாரர் மாநகராட்சியை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண். C.M.A. . 4/2011 & 5/2011 ன் மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார்,<br><br>எனவே மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் மாநகராட்சி வழக்கறிஞரை எதிர் வழக்காடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ5/1627/2011 | 313) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 4. | **2011–2012ம்** ஆண்டில் இம்மாநகராட்சியின் உபயோகத்திற்கு பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் வாங்கவும் மற்றும் அச்சிட்டு பெறவும் உத்தேசமாக ரூ **25/–** இலட்சம் செலவு ஆகும். இச்செலவினத்தை மாநகராட்சி **2011–2012ம்** ஆண்டிற்குரிய வருவாய் நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) அனுமதிக்கலாம்.<br><br>2) அவசர அவசியம் கருதி மாமன்றத்திற்கான அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சிக்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கவும் அச்சிட்டு பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>சி4/1791/2011 | 314) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 5. | இம்மாநகராட்சி பகுதியில் கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவ மழையினால் மிக அதிகமான வெள்ளச்சேதங்கள் ஏற்பட்டு மாநகரின் அநேக பகுதியில் மழைநீர் தேங்கியும், ஏராளமான சாலைகள் பழுதுபட்டும் இம்மாநகருக்கு அதிகமான சுகாதார கேட்டினையும் போக்குவரத்து சீர்கேட்டினையும் ஏற்படுத்தியது.<br><br>மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், முதன்மை செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அவர்களின் ஆலோசனைகளின் பெயரில் மாநகராட்சியின் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் உடனடியாக ஆயில் மோட்டார் மற்றும் மின் மோட்டார்கள் மூலம் தேங்கிய மழைநீரை அகற்றவும், பழுதடைந்த சாலைகளில் கிராவல் கொண்டு நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெறவேண்டியதிருந்ததால் இப்பணிகள் இம்மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1996 விதி 15ன் கீழ் ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு பொது நிதியிலிருந்து பணிகள் செய்யப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** பதிவு செய்யலாம்.<br><br>இ1/19870/2010 | 315) அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது |
| | 6. | இம்மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட 42வது வார்டு டி.எம்.பி. காலனி இரண்டாவது பிரதான சாலையில் பாதாள சாக்கடை பணிகள் செய்யவும் சாலை அமைக்கவும் இடையூராக உள்ள மின்கம்பத்தை மின்சார வாரியம் மூலம் மாற்றி அமைக்கவும் இதற்கான செலவினத்திற்கும் மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகின்றது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br><br>இ3/18876/2010 | 316) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப் பட்டது |
| | 7. | தூத்துக்குடி மாநகராட்சி சர்வே வார்டு 2 பிளாக் எண். 15 நகரளவு எண். 1376/2எ பாளையங்கோட்டை ரோட்டில் திரு. மத்திரமூர்த்தி மற்றும் 14 நபர்களின் வணிக கட்டிட ஆக்கிரமிப்பை வரன்முறை செய்து பட்டா வழுங்க கோரியுள்ள மனுவில் மேற்படி இடத்திற்கு மார்க்கெட் மதிப்பு இரு மடங்கு கட்டணத்தை அரசுக்கு செலுத்த சம்மதம் தெரிவித்தும் நெடுங்கால தங்களது அனுபவத்தை வரன்முறை செய்து கொடுக்க கோரியதின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க. டி1/71225/1995 நாள் 20–12–2010ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட இடத்திலுள்ள ஆக்கிரமிப்பை வரன்முறை செய்து பட்டா வழங்குவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றுவது குறித்து நடவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்பி வைக்க கேட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**– மாநகராட்சி பகுதிகளிலுள்ள அரசுபுறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பை வரன்முறை செய்வது தொடர்பான அரசாணைகள், விதிமுறைகள் மற்றும் தெளிவுரைகளுக்கு உட்பட்டும் மனுதாரர்கள் இடம் அனுபவம் தாவா தொடர்பான நீதிமன்ற தீர்ப்புகளுக்கு உட்பட்டும் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய வரியினங்களில் நிலுவையின்றி செலுத்திய பிறகு நகரளவு வார்டு 2 பிளாக் எண். 15 நகரளவு எண். 1376/2A இடம் நகரளவு ஆவணங்களின் படி ஜி.ஆர். நத்தம் என உள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள வணிக கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக வருவாய்த்துறையினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபனையில்லை என்ற விபரத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்கலாமா என்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>எப்1/1201/2011 | 317) இப்பொருள் ஒத்தி வைக்கத் தீர்மானிக்கப் பட்டது |

**8.** மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாளை ரோடு கடை எண் 20,21 சேர்த்து ஓரே கடையாக 24.02.2011ல் ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன் வரவில்லை. கீழ்கண்ட விபரப்படி 4 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பெயர் & முகவரி | ஒப்பந்த புள்ளி தொகை |
|---|---|---|
| 1 , | திரு.சி.ஜாண்சன்<br>7,திரவியபுரம் 4ம் தெரு<br>தூத்துக்குடி | ரூ 3900/– (மாத வாடகை) |
| 2 | திரு.ஜேக்கப் அந்தோணி ராஜ்<br>1/9 டூவிபுரம் 6ம் தெரு<br>தூத்துக்குடி | ரூ 2100/– (மாத வாடகை) |
| 3 | திரு.ஜே.விஅசோகன்<br>39.பாஸ்கர தாஸ் நகர் 1ம் சந்து<br>மதுரை | ரூ 4600/– (மாத வாடகை) |
| 4 | திரு.சி.செல்லப்பா<br>2/4 அண்ணாநகர் 5ம் தெரு<br>தூத்துக்குடி | ரூ 3500/– (மாத வாடகை) |

மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளின் பேரில் முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**– மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளில் திரு.ஜே,வி.அசோகன் என்பவர் கூடுதலான தொகைக்கு மாத வாடகை ரூ 4600/- கோரியுள்ளார். மேற்படி கடையின் தென்புறம் உள்ள கடை மாத வாடகை ரூ 1200/- க்கு விடப்பட்டுள்ளது. வடபுறம் உள்ள கடை ரூ 2901/- க்கு தற்போது வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தற்போது ஏலம் விடப்பட்டுள்ள கடைஅருகில் உள்ள கடையைப் போன்று இரு மடஙகு அளவுள்ளதாகும். எனவே திரு.ஜே.வி. அசோகன் என்பவரின் மாத வாடகை தொகை ரூ 4600/- என்பது நியாயமான வாடகையாக உள்ளதாலும் தென்புறம் உள்ள கடையை விட ரூ 2200/- கூடுதலாக உள்ளதாலும் அன்னாரின் ஒப்பந்த புள்ளியை ஏற்கலாம்.

அ16/11574/2006

318) அலுவலகக் குறிப்புப்படி திரு ஜே.வி.அசோகன் என்பவரின் ரூ.4600/– க்கான உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.

மாமன்றம் தூத்துக்குடி
நாள் 24–02–2011

மேயர்
மாமன்றம் தூத்துக்குடி